www.Padasalai.Net www.TrbTnpsc.com

வகுப்பு : 8

தேர்வு எண் | | | | | | |

# இரண்டாம் இடைப் பருவத் தேர்வு - 2024

## தமிழ்

நேரம் : 1.30 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 50

பகுதி - I

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 8X1=8

1. காட்டிலிருந்து வந்த ---------- கரும்பைத் தின்றன.
அ) முகில்கள் ஆ) முழவுகள் இ) வேழங்கள் ஈ) வேய்கள்

2. பானை -------- ஒரு சிறந்த கலையாகும்.
அ) செய்தல் ஆ) வனைதல் இ) முடைதல் ஈ) சுடுதல்

3. அரசரை அவரது ---------- காப்பாற்றும்
அ) செங்கோல் ஆ) வெண்கொற்றக்குடை
இ) குற்றமற்ற ஆட்சி ஈ) படை வலிமை

4. நம்மை ----------ப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.
அ) இகழ்வாரை ஆ) அகழ்வாரை இ) புகழ்வாரை ஈ) மகிழ்வாரை

5. 'கண்ணா வா' – என்பது -------- த் தொடர்
அ) எழுவாய் ஆ) விளி இ) வினைமுற்று ஈ) வேற்றுமை

6. 'ஆன்பெருநை' என்று அழைக்கப்படும் ஆறு --------
அ) காவிரி ஆ) பவானி இ) நொய்யல் ஈ) அமராவதி

7. என் நண்பன் செய்த தொழிலில் அவனுக்கு -------- பெருகிற்று.
அ) காரி ஆ) ஓரி இ) வாரி ஈ) பாரி

8. மரபுத் தொடருக்கான பொருளைத் தேர்க.
ஆயிரங்காலத்துப் பயிர்
அ) இயலாத செயல் ஆ) நீண்டகாலமாக இருப்பது
இ) ஆராய்ந்து பாராதது ஈ) விரைந்து வெளியேறுதல்

பகுதி - II

பிரிவு – 1

II. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி. 3X2=6

9. பனையோலையால் உருவாக்கப்படும் பொருள்கள் யாவை?

10. பண்பு, அன்பு ஆகியவை பற்றிக் கலித்தொகை கூறுவன யாவை?

11. கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் யாவை?

12. உழவர்கள் எப்போது ஆரவார ஒலி எழுப்புவர்?

13. சிறந்த ஆட்சியின் பண்பாகத் திருக்குறள் கூறுவது யாது?



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

பிரிவு – 2

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி. 3X2=6

14. தொகைநிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

15. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லுருபுகளை இட்டு நிரப்புக

அ) இடி -------- மழை வந்தது (உடன் / உடைய)

ஆ) அருவி மலையில் -------- வீழ்ந்தது. (நின்று / இருந்து)

16. இயல்பு புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

17. கைத்தொழில் சார்ந்து உங்கள் பொறுப்புகள் இரண்டு எழுதுக.

18. கலைச்சொல் எழுதுக.

அ) Dairy Farm ஆ) Horn

பகுதி - III

பிரிவு – 1

III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி. 3x4=12

19. மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் குறித்து எழுதுக.

20. மழையின்மையால் செடிகள் வாடிய நிலையை விளக்குக.

21. நமக்கு இருக்க வேண்டிய பண்பு நலன்களாக நல்லந்துவனார் கூறும் விளக்கங்களைத் தொகுத்து எழுதுக.

22. கொங்கு மண்டலச் சதகம் கூறும் கொங்கு மண்டலத்தின் எல்லைகள் யாவை?

23. உழவுத் தொழில் பற்றி தகடூர் யாத்திரை கூறுவன யாவை?

பிரிவு–2

அடிபிறழாமல் எழுதுக. 3+2=5

24. 'ஆற்றுதல்' தொடங்கி 'செறாஅமை' முடிய பாடறிந்து ஒழுகுதல் பாடலை எழுதுக.

25. 'இதனை' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

பகுதி – IV

பிரிவு – 1

IV. கடிதம் எழுதுக. 1x5=5

26. இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.

பிரிவு – 2

ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும். 2x4=8

27. காலம் உடன் வரும் – கதையைச் சுருக்கி எழுதுக.

28. காற்றுக் கருவிகள் குறித்து செய்திகளைத் தொகுத்து எழுதுக.

29. கொங்கு நாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டு வணிகம் குறித்து எழுதுக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned by CamScanner